89
ஜூலை '88
மாத இதழ்
80 காசு

# சுட்டி

## இருட்டில் கல்வி வெளிச்சத்தில் விலைப்பட்டியல்!


### இவ்வாண்டு விலைப்பட்டியல்

| | ரூ | பை |
|---|---|---|
| பி.ஏ. ...... | 1000 | – |
| பி.எஸ்சி.. | 3000 | – |
| பி. காம்... | 5000 | – |
| கம்ப்யூட்டர் சையன்ஸ். | 15000 | – |

முந்துங்கள்! முந்துங்கள்!!

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே !



நீண்ட இடைவெளிக்குப் பின் ஏற்பட்ட உற்சாக வெள்ளத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலே இக்கடிதத்தை எழுதத் தூண்டியுள்ளது.

சென்ற வாரம் ஆசிரியர் குழுவினர் இருவர் சுட்டி வாசக அன்பர்களையும், வாசகர் இயக்க உறுப்பினர்களையும், முகவர்களையும் சந்திக்கும் முதல் கருத்தாய்வுப் பயணமாக வட ஆற்காடு மாவட்டத்தின் சில முக்கிய பகுதிகளுக்குச் சென்றிருந்தோம்.

சென்ற இடமெல்லாம் சுட்டி அன்பர்கள் கரை கடந்த ஆர்வத்துடனும், அன்புடனும் சுட்டி ஆசிரியர் குழுவினரை வரவேற்றுக் கருத்துப் பரிமாற்றம் செய்தனர். சுட்டியின் மேல் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், உரிமையுடனான தோழமையும் எங்களை மெய் சிலிர்க்க வைத்தன.

சுட்டி பிறந்த நாளிலிருந்து படிப்பவர்கள்-ஒவ்வொரு இதழையும் பாதுகாத்து வைத்திருப்பவர்கள் - சுட்டியின் கட்டுரைகளை அச்சடித்துப் பரப்புபவர்கள் - சுட்டி பின் தங்கிய காலத்திலும், சுட்டி விற்பனையை விடாத ஆர்வமிகு புரட்சி முகவர்கள் – பேராசியர்கள், அரசு அலுவலர்கள், கவிஞர்கள், வணிகர்கள் நெசவாளர், நகை வேலை செய்வோர். மாணவர்கள் இப்படி சுட்டி வாசக மலர்களின் வண்ணம் பலவாக இருப்பினும், அனைவரிடமும் காணப்படும் ஒற்றுமை : மனித நேயம், சமூக மாற்றத்தில் தன் சிறு பங்கையேனும் அளிக்கும் ஆர்வம், சுட்டியின் மேல் வைத்துள்ள மாற, அன்பும் நம்பிக்கையும்!

பிற மசாலா ஏடுகளை விட எண்ணிக்கையில் குறைவான வாசகர்களைச் சுட்டி பெற்றிருந்தாலும் வேறு எந்தப்பத்திரிகைக்கும் இல்லாத மிகச்சிறந்த மனிதாபிமானிகளை வாசகக் கண்மணிகளாகப் பெற்றமைக்குச் சுட்டி மகிழ்ச்சியில் விஸ்வரூபம் எடுக்கிறது.

இந்த நம்பிக்கைக்கும், அன்பிற்கும் பாத்திரமாக தன்னை மேலும் கூர்மையாக்க சுட்டி கருத்துத்தவமிருக்கும்; கடந்து போன தோல்விகளையும் சோர்வுகளையும் வாசகர் தந்த புது உற்சாகத்தால் சாம்பலாக்கும்; சுட்டிக்குப் புதிய பரிமாணங்களைத் தோற்றுவிக்கும் புதிய திட்டங்களை அறிவிக்கும்; வாசகர் இயக்கத்தை விரிவாக்கி செயல்பூர்வமாக்கும்

இது போன்ற பயணங்களை வாசக அன்பர்கள் விரும்பினால் பிற மாவட்டங்களிலும் நிகழ்த்தலாம். நேரடி கருத்துப் பரிமாற்றங்கள் நம் தோழமையை மேலும் செழுமையாக்குமில்லையா? சுட்டியை மேலும் பயனுள்ளதாக்குமில்லையா? உங்கள் எதிரொலி என்ன?

அன்புடன்
— ஆசிரியர் குழு.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# கருணாநிதியிடம் நான்கு கேள்விகள்

1) தமிழர் முன்னேற்றத்திற்கும் தமிழின் முன்னேற்றத்திற்கும் பகுத்தறிவு வளர்ச்சிக்கும், விளம்பர நோக்கத்திற்கு மேலாக, நீங்களோ தி.மு.க.வோ ஆக்கபூர்வமாக, செய்துள்ளதை மனதில் கை வைத்துச் சொல்ல முடியுமா? நீங்கள் ஆட்சியேற்றவுடன் இந்தியொழிந்து, ஆங்கிலம் தழைத்து தமிழ் மெலிந்தது என்பது உண்மையில்லையா? அகில இந்தியாவில் தமிழனின் தரம் உயர்ந்ததா? தமிழ் கல்விமொழியாகும் தகுதியையேனும் பூரணமாய்ப் பெற்றதா? ஆட்சியேற்ற கையோடு ஓடாத திருவாரூர் தேரை மிக அவசியமாக ஓட வைத்த பகுத்தறிவாளராகிய தாங்கள் மூகாம்பிகை கோவிலுக்குச் சென்ற எம்.ஜி.ஆரை எந்தத் தகுதியோடு விமர்சித்தீர்கள்?

2) இன்று ஈழ விடுதலைக்கும், விடுதலைப் புலி இயக்கத்திற்கும், பேராதரவுக் குரல் கொடுத்து, பொங்கியெழும் நீங்கள், அன்று உங்கள் ஆட்சியில், பிரபாகரன் சென்னையில் இருந்தபோது, அவரைக் கைதுசெய்து சிங்கள அரசிடம் காட்டிக் கொடுத்து ஒப்படைத்ததேன்? நீங்கள் மீண்டும் அரியணை ஏறினால் ஈழத்துக்கு விடிவு வரும் என்று எப்படி நம்புவது?

3) கடுமையான ஊழலால்தான் உங்கள் கட்சி செல்வாக்கிழந்தது என்பதை மறுக்கமுடியுமா? இன்று பால் குடிக்காப் பூனையாகத் தோற்றமளிக்கும் நீங்கள், நாளை மீண்டும் ஆட்சியைப் பிடிக்க நேர்ந்தால், ஊழல் செய்ய மாட்டீர்கள் என்று எதை வைத்து நம்புவது? ஊழல் சுகம் கண்டவர்கள் உங்களோடிருக்கும்போது ஊழலற்ற ஆட்சி எப்படிச் சாத்தியமாகும்? கொள்கையிலும் ஊழலிலும் அதிமுகவிலிருந்து உங்கள் கட்சி எந்த விதத்தில் மாறுபட்டது?

4) கலைஞராகிய நீங்கள் உங்கள் சினிமாவிலும், பத்திரிகையிலும், முன் வைத்தது சமூக மாற்றத்தையா? அல்லது வணிக வெற்றியையா? வணிகப்படங்களின் மசாலா சங்கதிகள் உங்கள் படங்களிலும் இடம் பெறத் தவறினவா? உங்கள் குங்குமம் பத்திரிக்கை குமுதத்தின் தம்பிதானே? தமிழ் எழுத்தையும் திரைப்படத்தையும் அனைத்துலக மட்டத்திற்கு எடுத்துச் செல்ல எந்த முயற்சியேனும் உயர்வாக நீங்கள் செய்துள்ளீர்களா? கலைச் சாதனங்களை வைத்து காசு சேர்க்கவும், அதிகாரத்தைப் பிடிக்கவும் கொச்சைப்படுத்திய உங்களிடமிருந்து மேலான கலாச் சாரத்தைத் தமிழ் மக்கள் எப்படிப் பெறுவார்கள்?

(அடுத்து : வாக்காளர்களிடம் 4 கேள்விகள்) -- எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கல்யாணசுந்தரம் என்ற மாமனிதர்

இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிற்சங்க இயக்கத்திலும் தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலும் ஆழமான முத்திரைகளைப் பதித்துச் சென்றவர் தோழர் கல்யாண சுந்தரம்

**குடும்ப வாழ்க்கை:** அத்வைதமும், சைவ சித்தாந்தமும் கொண்ட மத்தியதர வர்க்க குடும்பம் ஒன்றில் பிறந்தவர். ரெயில்வே இலாக்காவில் சாதாரண குமாஸ்தா. மனைவி லோகம்பாள். ஒரே மகள் 10 வயதிலேயே பாம்பு கடித்து பலியானவள். இதயத்தில் விழுந்த அந்தப் பலத்த அடியால் ஏற்பட்ட காயத்தை இயக்கப் பணிகளே பெரிதும் ஆற்றின. ஆனால் 2 வருடத்திற்கு முன்பு இறக்கும்வரை அந்த அதிர்ச்சியிருந்து லோகாம்பாள் மீளவே இல்லை. மகளின் மரணத்திற்குப் பிறகு தாம்பத்திய வாழ்க்கை என்பது ஏறக்குறைய அஸ்தமித்தே போய் விட்டது!

**அரசியல் வாழ்க்கை:** 19 வயதில் விடுதலை இயக்கத்தில் பிரவேசம். காந்திஜியின் அழைபபை ஏற்று போராட்டத்தில் குதிப்பு. அதனால் வேலை இழப்பு. பல்லாண்டுகள் சிறை. திருச்சி மாவட்ட காங்கிரஸ் தலைவா. பின்பு கம்யூனிஸ்ட் கட்சிக்கு அர்ப்பணிப்பு. ஒரே மகளின் சடலம் வீட்டில் கிடந்த போதும் சவ அடக்கத்தைப் பற்றிககவலைப்படாமல் பொன்மலைப் போராட்டதை நடத்த புறப்பட்டுப்போன போராளி. சிறந்தபார்லிமெண்டேரியன். 10 ஆண்டுகளாககட்சியின் மாநிலச் செயலாளர். திமுகவிலிருந்து எம்.ஜி.ஆர் வெளியேறியபோது வலதுகரமாய் விளங்கியவர் தோளோடு தோள் நின்று அவரை முதல்வராக்கமுன்னுரை எழுதியவர். அதே எம்.ஜி ஆரால் கைது செய்யப்படும் அளவிற்கு தொழிலாளர் போராட்டத்தை முதல் மூச்சாக கொண்டவர்.

**வாழ்க்கை முறை :** பொது வாழ்க்கையில் இருப்போர் அகவாழ்க்கையில் எவ்வாறு இருக்க வேண்டும்என்பதற்கு இணையற்ற உதாரணமாய் திகழ்ந்தவர். எந்த லாகிரி வஸ்துவும் அவரை நெருங்கியதில்லை. ஒழுக்க நெறியை உயிராய் கருதியவர், மனக்கட்டுப்பாடு, உணவுக் கட்டுப்பாடு, கடும் உழைப்பு ஆகிய மூன்றும்தான் அவரது நீடித்த வாழ்வுக்குக் காரணம்.

**சோதனைகள் :** ஒ,ரே மகளின் இழப்பு சராசரி மனிதனுக்குரிய தாம்பத்திய வாழ்க்கை இல்லாமல் போன நிலை, சிறையில் இழைக்கப்பட்ட கடும் சித்தரவதைகள். அதன் விளைவாக ஏற்பட்ட நெடுங்கால வயிற்றுவலி-இரண்டு முறை மரணத்தின் வாயில் வரை இழுத்துச் சென்ற மிகப் பெரிய விபத்துக்கள். நிரந்தரமாகிப் போன உடல் பாதிப்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைமை அமெரிக்கா நிதி உதவியைப் பெற்ற போது நடத்திய கடுமையான உட்கட்சிப் போராட்டம அதன்விளைவாக கட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

**பலமும் பலவீனமும்:** முன் கோபம் வரும்போது எரிமலை அடங்கி விட்டாலோ ஆழ்கடல் அமைதி, பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் போது மெல்லிய தென்றல். முகஸ்துதி செய்வோரின் கோள் மூட்டல் மீது நம்பிக்கை, முதலில் ஏற்பட்ட அபிப்பிராயத்தைக் கடைசி வரை மாற்றிக் கொள்ளாத பிடிவாதம், மனத்திற்குப்பட்ட கருத்தைப் பட்டவர்த்தனமாகப் போடு உடைக்கும் துணிச்சல். சவத்தைக்கூட உயிர்ப்பித்துச்சுறுசுறுப்பாகச் செயல்படவைக்கும் அசாத்திய திறமை கொண்ட ஒழுங்கமைப்பாளர்.

**பிரதிபலிப்பு :** அரசியலிலும், கம்யூனிச இயக்கத்திலும் வாழ்க்கையின் கடைசி வருடத்தில் ஓரளவு தனிப்பட்டது, இடதுசாரி ஒற்றுமையை விட காங்கிரஸ் ஆதரவுப் போக்கே மேலோங்கியது. ஆகியவற்றுக்கு அவரது தனிப்பட்ட பலவீனங்களே அடிப்படையாயிற்று கட்சிக்கு அப்பாற்பட்ட ஓரளவு மார்க்ஸியம் படித்த தேசிய போர்வையில் பிராமணீயத்தை வைத்துக் கொண்டுள்ள சில மிதவாதஅறிவு ஜீவிகளின் தலையீடுதான் எம் கேஸின் செல்வாக்கிற்கு கைகேயியாக வந்து சேர்ந்தது

கடலில் சங்கமிக்கிற கட்டத்தில் கூவத்தின் இறுதி முனை தீண்டி விட்டதாலேயே காவிரித்தாயின் புனிதம் கெட்டு விடாது அதன் பெருமயழிந்து விடாது. அமரர் எம்.கே.வும் அப்படியே.

— டி.எஸ். ரவீந்திரதாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கொரியா



❀ சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் உள்ளது கொரியா. காலந்தோறும் இவ்விரு நாடுகளுடன் கொரியாவிற்கு ஏற்பட்ட மோதலினால் மலர்ந்ததே அதன் அனைத்துத்துறை வளர்ச்சியாகும்.

❀ தமிழகம் மாதிரி இங்கும் கி.மு, முதல் நூற்றாண்டு முதல் மூவேந்தர் ஆட்சி: கொகுர்யோ, பேச்சே, சில்லா இந்த மூவரின் ஆட்சியில் மொழியும் கலாச்சாரமும், புத்தமதமும் வளர்க்கப்பட்டன. 7-ஆம் நூற்றாண்டில் சில்லா பிற இருவரையும் வென்று, நாடு ஒரு குடையின்கீழ் வந்தது. இன்று வழக்கில் உள்ள கொரியா மொழி சில்லாவின்மொழியே.

❀ நாடு பிடிக்கும் ஆசையுடன் 1592 இல் ஜப்பான் தன் தரைப்படைகளை அனுப்பி வெற்றி கண்டாலும், கொரியாவின் அபார கடற்படை வலிமைக்கு முன் நிற்க முடியாமல் தோல்வியுற்று ஓடியது.

❀ 1656 இல் நுழைந்த முதல் ஐரோப்பியரான டச்சுக்காரர்கள் 36 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஐரோப்பியர் நுழைவை எச்சரிக்கையுடன் கொரியா முளையிலேயே கிள்ளி எறிந்தது. எனினும் பின்னர் சீனா வழியாக வந்த பாதிரியார்கள் கிறித்துவ மதத்தை இந்த மண்ணிலும் வேரூன்றச் செய்தனர்.


❀ 1910இல் ஜப்பான் கொரியாவை அடிமைப்படுத்தி தன்னுடன் இணைத்தது. கொரியா மொழிப்பள்ளிகளை மூடியது. ஜப்பானிய மொழியையும் கலாச்சாரத்தையும் திணித்தது. கொரிய ஏடுகளைத் தடை செய்தது. ஜப்பானிய பெயர்களை வைத்துக் கொள்ளவும், ஜப்பானிய ஷின்டோ ஆலயங்களில் வழிபடவும் வற்புறுத்தியது. 1—3—1919ல் ஜப்பானின் மனசாட்சியை உசுப்ப 20 லட்சம் கொரியர்கள் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டத்தை ஜப்பான் இரும்புக்கரம் கொண்டு நசுக்கியது. 47,000 மேரை கைது செய்து, 23,000 பேரைக் காயப்படுத்தி, 10,500 பேரைக் கொன்றது. 2வது உலகப்போரில் தன் சுயலாபத்துக்காக, உடல் வலிமை படைத்த கொரியர்களைச் சுரங்கத்திலும், தொழிற்சாலையிலும், போர்க்களத்திலும் வாட்டி வதைத்து.

❀ 1945 இல் ஜப்பானுக்கு உலகப் போரில் ஏற்பட்ட தோல்வியே, கொரியர்களை ஜப்பானியரின் கிடுக்கிப்பிடியிலிருந்து விடுவித்தது. ஆனால் பிரச்சனை அத்தோடு முடியவில்லை. வெற்றி பெற்ற இரு வல்லரசுகளும் கொரியாவை இரு துண்டாக்கிப் பங்கு போட்டன.

(அடுத்து: கொரியா—வடக்கும், தெற்கும்)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பதில்கள்



மூவாசையை விட வேறு பேராசை உண்டா ?

சு. சமுத்திரம் : மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையைவிட இப்போது பப்ளிசிட்டி ஆசை பெருத்து விட்டது! தீக்குளிப்பவர்களை டி.வி. யில் காட்டுவதாகச் சொல்லிப் பாருங்கள். எத்தனை பேர் வரிசையில் வந்து நிற்பார்கள், தெரியுமா !

பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தி விட்டால் ?

பெரியார் : நிறுத்தி விட்டால் 'உலகம் விருத்தியாகாது மனித வர்க்கம் விருத்தியாகாது, என்று தர்ம நியாயம் பேச சிலர் வருவார்கள், உலகம் விருத்தியாகா விட்டால் பெண்களுக்கு என்ன கஷ்டம் வரும் ? இதுவரை பெருகிக் கொண்டு வந்த விட்டால் பெண்களுக்கு என்ன கஷ்டம் வரும் ? இதுவரைப் பெருகிக் கொண்டு வந்த மானிடவர்க்கத்தால் ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பது நமக்குத் தெரியவில்லை.

வார்த்தைகளின் பலம் என்ன ?

ஷேக் : புறாவைப்போல் பறந்துச் சென்ற ஒரு வார்த்தையை நாலு குதிரைகள் சேர்த்தாலும் இழுத்து வர முடியாது.

நூல்களைப் படிக்கும் முறையை விளக்குக.

பேகன் : சில நூல்களை ருசி பார்க்க வேண்டும். சில நூல்களை மென்று தின்னாமல் விழுங்கிவிட வேண்டும். சில நூல்களை நன்கு சுவைத்து மென்று விழுங்கிச் செரிக்கச் செய்ய வேண்டும்.

நம் அரசியலார் சோசலிசம் பேசுவது எப்படி இருக்கிறது ?

சி. என். அண்ணாதுரை: பணம் ஒரு சிலரிடம் போய்க் குவிந்துக் கொள்வதற்கான வழியை அமைத்துக் கொடுத்து விட்டு சோசலிசம் பேசுவது, கன்றுக் குட்டி இறந்த பிறகு, வைக்கோலால் செய்த உருவத்தின்மீது அதன் தோலைப் போர்த்தி வைத்து, அதைக் காட்டிப் பசுவை ஏய்த்துப்பால் கரந்திடும் தந்திரம் போன்றதாகும்.

சாதுவானவர்கள் வாழ்வில் சங்கடப்படுவார்களா ?

வாரியார் : சாதுக்களுக்குத்தான் எப்போதும் சங்கடம் விளைகின்றது. மனிதர்கள் தமக்கு இடர்புரிகின்ற நரி பாம்பு, தேள், புலி, சிங்கம், இவைகளைக் கொன்று தின்பதில்லை. பரம சாதுக்களாகவும், உதவி புரிகின்றனவுமாகிய ஆடு, மாடு, கோழி இவைகளைக் கொன்று தின்கின்றனர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# வெயில் காலப் பொய்கள்

எதில் தான் இங்கு மூடநம்பிக்கை இல்லை? கொளுத்தும் வெயில் கொடுமையைத் தணிப்பதாகச் சில பாமரப் பொய்கள் பரவி வருகின்றன. அவை வருமாறு:

1. புகையிலையை மென்றால் தாகம் தணியும்.
2. தண்ணீரைவிட மது அருந்துவது தாகத்தை நன்கு தணிப்பதாகும்.
3. ஐஸ் பானங்கள், ஐஸ் கிரீம்கள், குளிர் உணவுகள் தாக சாந்தி செய்வதுடன் உடலையும் குளிர்விக்கும்.
4. உணவைத் தள்ளிப்போடல், திட உணவு குறைவாக உட்கொள்ளுதல் இவை உடலைக் குளிர்ச்சியாக்கும், லேசாக்கும்.
5. ஆண்களைவிடப் பெண்கள் வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் உடையவர்கள்.
6. நிறைய வேர்ப்பது நல்லதல்ல. இது பலவீனத்தின் வெளிப்பாடு.

வெப்பத்தையும், தாகத்தையும் தணிக்கும் சில உண்மைகள் வருமாறு: —

1. தண்ணீரோ, திரவப் பொருளோ தடையின்றி பருகுக. வெயிலில் வெளியே கிளம்பு முன் ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்துவிட்டுச் செல்லுக.
2. வெள்ளை அல்லது வெளிர் நிறத்தில் தொள தொளப்பான பருத்தி ஆடையே அணியுங்கள். கஞ்சி போட்ட உடை வேண்டா. பாலியஸ்டர் ஆடைகளைத் தவிர்க்கவும்.
3. வெயிலில் நடக்கும்போது தலையைத்துணியாலோ, தொப்பியாலோ, குடையாலோ மூடுங்கள். தரையில் இறங்கும் வெப்பமே வறட்சி ஏற்படுகிறது.
4. வேர்ப்பதைத் தடை செய்யாதீர்கள். உடல் வெப்பத்தைத் தணிக்க இயற்கை உருவாக்கிய அற்புத உத்தி இது.
5. மருந்து கலக்காத சோப்பைப் பயன்படுத்தி நாள் தோறும் இருமுறை குளிர்நீரில் தலைக்குக் குளியுங்கள்.
6. வெளியிலோ, வீட்டிலோ எந்த வேலையையும் சக்திக்கு மீறி செய்யாதீர்கள். வேலைக்கு நடு நடுவே சின்ன ஓய்வெடுத்துத் தொடர்வது வெப்ப இழப்பை ஈடு செய்யும்.

— சித்தன்

FREE. E - BOOKS , www.thamizham.net.,

விடுதலைக்கு வித்திட்டவர்கள் :

# அயர்லாந்தின் மைக்கிள் காலின்ஸ்

- பிரிட்டனிடமிருந்து அயர்லாந்திற்கு விடுதலை பெற்றுத்தரப் போராடியவர்களின் நூதனமானவர், வித்தியாசமானவர் புதிய உத்திகளைக் கையாண்டவர் காலின்ஸ்.
- 20 வயது மேரி 60 வயது முதியவரை மணந்து இன்பமாக நடத்திய இல்லற வாழ்வில் 8வது குழந்தையாக 1890இல் பிறந்தவர் மைக்கிள் காலின்ஸ். திண்மையான உடலும், ஊக்கமும் உற்சாகமும் பெற்ற மனமும் இவர் பெற்ற கொடைகள்.
- அறிவும் ஆற்றலும் இருந்தும் பெருஞ்செல்வம் படைத்து ஆனந்தமாய் வாழ்வதைவிட நாட்டு விடுதலைக்காக ஆண்டியாய் வாழ்வதே சிறந்தது என்பது இவரது முடிவு. 1919-21 இல் நடந்த ஆங்கிலோ – ஐரிஷ் போராட்டத்தில் இவர் படுக்கக்கூட இடமின்றி அலைந்தார். இவர் தலைக்கு பிரிட்டிஷ் அரசு 10,000 பவுண்டு பரிசு அறிவித்தும் இவரைப் பிடிக்க முடியவில்லை.
- இவரது மிகச் சிறந்த நண்பன் சைக்கிள்தான். நாடெங்கும் சைக்கிளில் விடாது புகுந்து சென்று கொண்டேயிருந்தார். மாறுவேடம் ஏதும் போடவில்லை. இந்த சைக்கிள் பயணமே பிரிட்டிஷ் படையிடமிருந்து இவரைக் காத்தது.
- ஒரு நாளைக்கு 50 சிகரெட்டு குடித்தவர், நாட்டு உடல் நலன்கள் கருதி முழுவதும் விட்டொழித்தார். விட்டவுடன் இன்னும் உற்சாகமாகச் செயல்பட்டு, குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்யும் வல்லமை பெற்றார்.
- புதிய முறை கொரில்லா யுத்த உத்திகளை இவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பயன்படுத்திக் கொரில்லாப் போர் வரலாற்றில் புதிய சாதனை படைத்தார். பிரிட்டிஷ் இரகசிய போலீஸ் எந்திரத்தை நிலைகுலைய வைத்தார். ஒற்றர்களில் அனுதாபத்தைத் தேசிய இயக்கத்துக்குப் பெற்றார். 6 ஒற்றர்கள் இவரின் உற்ற தோழர்களாகி அரசின் அந்தரங்கங்களை வெளிப்படுத்தினர்.
- 1922 இல் பிரிட்டனை ஒரு வழிக்குக் கொண்டு வந்து அயர்லாந்துக்குச் சுதந்திரம் கிடைக்க நிகழ்த்திய பேச்சில் இவரே முக்கியமானவர். அதன்பின் ராணுவத் தளபதியாகவும் அரசு தலைவனாகவும் பொறுப்பேற்ற 10 நாட்களில், இராணுவத்தைப் பார்வையிடப் பயணம் சென்றபோது துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். இந்த விடுதலைச் சிற்பியின் வயது 32 தான்.

— உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

கோமலின் :

# கறுப்பு வியாழக்கிழமை



விடுதலைக்குப் பின்பு வாழ்க்கையைக் காலம் தான் எவ்வளவு தலை கிழாக மாற்றி விட்டது !

திருவொற்றியூர் சந்தையில் மாடு வியாபாரம் செய்து கொண்டிருந்த திருவடிச் செல்வம் எம்.எல்.ஏ ஆகி விடுகிறார். டீ கடையில் வேலைச் செய்து கொண்டிருந்த அவரது நண்பர் அஞ்சா நெஞ்சனும் எம்.எல்.ஏ. வாகிறார்.

இந்த இரண்டு பேரும் ஊரை எப்படிக் கொள்ளையடித்துக் கொழுக் கிறார்கள். லஞ்ச லாவண்யத்தில் எப்படித் திளைக்கிறார்கள் பதவி வெறி பிடித்து எப்படி அலைகிறார்கள் என்பதுதான் கதை.

பணம் பதவி அந்தஸ்து ஆகியவற்றிற்காக மக்களை எப்படியெல்லாம் வேட்டையாடுகிறார்கள் என்பதையும் அதே நேரத்தில் மக்களின் சேவகர்களாக எவ்வாறெல்லாம் வேஷம் போடுகிறார்கள் என்பதையும் இந்நாடகம் சித்தரிக்கிறது.

பதவி வேட்டையும், பணப் பேராசையும் இந்த இரண்டு எம்.எல்.ஏ. களைக் கூட ஒற்றுமையாக நீடிக்க விடுவதில்லை. தனிப்பட்ட குடும்ப விவகாரங்களும், தகராறுகளும் கட்சி விவகாரங்களாக உருமாறி தமிழ் நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் அரசியல் பிரச்சனைகளாகப் பரிணமிக்கின்றன.

முதலமைச்சர் மறைவுக்குப் பிறகு இவை பூதாகாரமாக விஸ்வரூபம் எடுக்கின்றன. யார் முதல்வர் என்ற போட்டியால் மூலைமுடுக்கெல்லாம் முடை நாற்றம் அடிக்கிறது. மக்களின் மையப்படுத்தப்பட்ட ஆன்மா என்று மதிக்கப்பெறும் சட்டசபையைவிடத் திருவொற்றியூர் மாட்டுச் சந்தையும் டீ கடையுமே மேல் என்பது நிருபணமாகிறது. சைக்கிள் செயின்களும் கத்தி கட்டாரிகளும், குண்டாந்தடிகளும் வீரத்திலகமிட்டு வரவேற்கப்படுகின்றன.

வெளியே ஆசிரியர்கள், விவசாயிகள் வேலை இல்லாத் திண்டாட்டத் தால் வேதனைப்படும் இளைஞர்களின் போராட்டங்கள் தீவிரமடை கின்றன. ஒரு புறம் ஆளும் வர்க்கத்தின் ஆட்சிப் போராட்டம்-மறுபுறம் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைப் போராட்டம். சமுதாயத்திற்குச் சரியான பதிலடி கொடுக்கக் காலம் கனிவோடு காத்திருக்கிறது.

கதை, வசனம் எழுதி இயக்கியுள்ள கோமல் சுவாமிநாதனே இதில் நடித்து இருக்கிறார். நாடகம் என்றாலே துணுக்குத் தோரணம் என்ற நிலையை மாற்றி வாழ்க்கையின் அன்றாட அடிப்படைப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து அதன் பின்னனியோடு-மூலக் காரணத்தைத் தொட்டுக் காட்டும் முயற்சியில் கோமல் மாபெரும் வெற்றி பெற்றுள் ளார்.

நாடகம் முழுக்க ஒரே சிரிப்பு மயம்! நமது சமுதாயத்தைப் பார்த்து-நமது நாட்டின் அவலத்தைப் பார்த்து-ஏன் நம்மையே பார்த்து நாமே சிரித்துக் கொள்கிறோம்,

வாத்தியார் ராமன், மதன், பிரசன்னா சீனிவாசன், சந்தானம் போன்ற கலைஞர்களின் அற்புதமான திறமைக்கு இந்நாடகம் ஒரு எடுத்துக் காட்டு

உலகமே நகைக்கத்தக்க வகையில் வாழும் நமது வாழ்க்கையைப் பற்றிய ஒரு சுயதரிசனம்தான் இந்நாடகம்.

— டி. எஸ். ரவீந்திரதாஸ்


## சுட்டி இலவசம்

*சுட்டியை ஏற்கக்கூடிய நண்பர்களின் முகவரி களை அனுப்புங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாய் அனுப்புகிறோம்.*


FREE E - BOOKS , www.thamizham.net.,

# மாரடைப்பும் தாம்பத்திய உறவும்

மாரடைப்பு ஏற்பட்ட பின்பு தாம்பத்திய உறவை அறவே ஒதுக்கிவிட வேண்டும் என்ற மூட நம்பிக்கையை அண்மைய மருத்துவ பரிசோதனைகள் தவிடு பொடியாக்கியுள்ளன.

சிக்கலற்ற மாரடைப்பு ஏற்பட்டதற்குப்பின் தாம்பத்திய உறவு கொள்வது உண்மையில் இதயத்திற்கு நன்மையே பயக்கும் என்று மருத்துவர்கள் உறுதியளிக்கிறார்கள். மாரடைப்பிற்குப் பிறகு சிபாரிசு செய்யப்படும் சிறிய உடற்பயிற்சிகள் மாதிரியே தாம்பத்திய உறவும் இதயத்திற்குப் புத்துணர்வு தரும்.

உடல் உறவுத் தூண்டல், தாம்பத்திய உறவு இவை 5° சாய்தளத்தில் மணிக்கு 3 மைல் வேகத்தில் நடப்பதற்குச் சமமாகும் மாரடைப்பிலிருந்து மீண்ட சராசரி இதயத்திற்கு இதுபோல இருமடங்கு ஆற்றல் உள்ளது. இந்த உண்மை புரியாமல் தாம்பத்திய உறவை இழப்பவர்கள் மூடர்களே.

தாம்பத்திய உறவு கொள்ளும்போது இரண்டாவது மாரடைப்பு வந்ததாகப் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகள் குறைவே. அப்படிப்பட்ட நிகழ்வுகளும் நன்கு மது அருந்திவிட்டு, வேசியருடன் அல்லது திருட்டுத்தனமாக உடல் உறவு கொள்ளுதல் போன்ற மன உறுத்தலும், அழுத்தமும் கொண்ட தவறான சூழலிலேயே ஏற்படுகின்றன. எனவே தாம்பத்திய உறவைத் தவிர பிற தவறான உறவில் ஈடுபடுவது ஆபத்தானது. தாம்பத்திய அன்பும் அரவணைப்புமே மனத்திற்கு மட்டுமின்றி இதயத்திற்கும் தெம்பைக் கொடுப்பதாகும்

மாரடைப்பிற்குப்பின் எப்போதும் உறவில் ஈடுபடலாம்? வேறு எச்சரிக்கை தேவையா? சிறிய உடற்பயிற்சிகள் செய்யும் தெம்பு இதயத்திற்கு ஏற்பட்டதை மருத்துவர்கள் உறுதி செய்யும்போது, தாம்பத்திய உறவும் கொள்ளலாம். மாரடைப்புக்கு முன் உறவு கொண்ட அதே கால இடைவெளி கடைப்பிடிக்கப்படவேண்டும். எளிதான சிரமப்படுத்தாக முறை முக்கியம் வயிறு முட்ட சாப்பிட்ட பின்போ, மிக வெப்பமான அல்லது மிகக் குளிர்ச்சியான சூழலிலோ செய்யக் கூடாது. இருவரும் வீண் மனக் குழப்பம், பயம் கொள்ளவே கூடாது. சாதாரண மாரடைப்பு வந்தவர்களுக்கு அடுத்த ஓராண்டிற்குள் மாரடைப்பு வரும் வாய்ப்பு, இதுவரை மாரடைப்பு வராத அதே வயதுடையோர்க்கு வரும் வாய்ப்பை விடக் குறைவு என்று உணர வேண்டும்.

உடல் உறவுக்கு முன் தியானம் செய்வது நல்லது. நைட்ரோகிளிசரின் மாத்திரை (0.5 மி.கி.) நாவிற்குள் உடல் உறவுக்கு 5 நிமிடத்துக்கு முன் வைப்பது அல்லது ஐசோசார்பைட் டினிரேட் மாத்திரை 10 நிமிடத்திற்கு முன் உண்பது பயனளிக்கக் கூடும்.

— சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

நடக்கின்ற கதை :



# பொருத்தம் சரியில்லை

வள்ளிக்கும் குமரனுக்கும் நீண்ட நாட்களாக காதல். அவள் பெற்றோருக்குத் தெரிய வந்த போது, அவனுக்கு என் பெண்ணைக் கொடுக்க முடியாது என்று பிடிவாதமாய் கூறி விட்டார்கள். அவளுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்தார்கள்

விபரமறிந்த காதல் ஜோடி சிறகடித்துப் பறந்தது. வல்லூறு கண்கள் வலை விரித்துத் தேடின. ம்ஹூம்...... அகப்படவில்லை, இரண்டு வருடங்களுக்குப் பிறகு வள்ளியின் பெற்றோர் இருப்பிடமறிந்து போனார்கள். நல்ல வார்த்தைச் சொல்லி பேரக் குழந்தையோடு அழைத்து வந்தனர்

தாலியில்லாமல் வெறுங்கழுத்தாயிருப்பது சரியில்லை என்பதால், நல்ல நாளில் கோவிலில் வைத்து தாலி கட்ட ஏற்பாடு செய்வோம் என நாள் குறிக்க ஐயரிடம் போனார்கள்.

இருவரது ஜாதகத்தையும் பார்த்த ஐயர். இவர்களுக்குப் பொருத்தம் சரியில்லை. திருமணம் செய்ய முடியாது என்றார்.

அவர்களுக்குக் குழந்தை இருப்பதை மறைத்து, 'ஐயரே இருவரும் விரும்பிப் போய்விட்டார்கள். நல்லாப் பார்த்துச் சொல்லுங்கள், என்றார்கள்.

இந்த ஜோடிகளுக்கு கிரகதோஷம் இருக்கிறது. இவர்கள் திருமணம் செய்து கொண்டால் குழந்தையே பிறக்காது என்றார் ஐயர். பெண்ணின் பெற்றோர் வாயடைத்து நின்றார்கள்.




முறையாக யோகாசனம் கற்க அரியதோர் வாய்ப்பு

சுட்டி அறம் சார்பில் விரைவில் யோகாசன வகுப்புகள் தொடங்கவிருக்கின்றன. எளிய முறையில் சிறந்த பயிற்சியாளர் பயிற்சி அளிக்கிறார் வாரம் இருமுறை வகுப்புகள். குறைந்த கட்டணம். சென்னை வாசகர்கள் பயனடையலாம். தொடர்பு கொள்க :

"சுட்டி அறம்" AP-138, H-பிளாக், அண்ணாநகர், சென்னை 600 040


FREE E - BOOKS , www.thamizham.net.,

# காந்தியம் பற்றி அம்பேத்கர்

("காங்கிரசும், காந்தியாரும் தீண்டத்தகாதோருக்குச் செய்தவை என்ன ?" என்று ஒரு நூல் டாக்டர் அம்பேத்கரால் எழுதப்பெற்று 1945 இல் வெளியானது. அந்நூலிருந்து **'காந்தியம்'** என்னும் கட்டுரையை மட்டும், கார்முகில் பதிப்பகத்தினர் அண்மையில் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளனர். அக்கட்டுரையின் ஒரு சிறுபகுதி கீழே தரப்பட்டுள்ளது. — சுபவீ)

காந்தியம் வர்க்கக் கூட்டமைப்பை வலியுறுத்துகிறது. சமுதாய அமைப்பின் நிரந்தர அம்சங்களாக, ஏழை-பணக்காரன், உயர்ந்தோன் - தாழ்ந்தோன், உடையவன் - உழைப்பாளி ஆகிய உடனடியான வேறுபாடுகளோடு கூடிய வருமானக் கட்டமைப்பையும் புனிதமானவையாகப் போற்றி நிற்கிறது. சமூகவியல் உடன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது காந்தியத்தை விடக் கேடு பயப்பது எதுவுமே இல்லை.

காந்தியம் என்பது வர்க்கக் கட்டமைப்பைவிட மோசமான ஒரு அமைப்பு இருந்தால், அதனோடும் கூடத் திருப்தி கொள்ளாது எனக் கூறுவதும் கூடப் போதுமானதாக இராது. காந்தியம், பட்டுப்போன ஒன்று; பயனற்றது; பலன் தராதது.

வர்க்கக் கட்டமைப்பு இறவாக் கொள்கையாகச் செயல்பட வேண்டும் என்பதே காந்தியத்தின் தேவையாகும். இதில் வியப்படைவதற்கு எதுவுமே இல்லை. ஏனெனில், காந்தியத்திலுள்ள வர்க்கக் கட்டமைப்பு ஒரு தற்செயலான நிகழ்ச்சியேயல்ல. காந்தியத்தின் அதிகாரபூர்வமான கோட்பாடு வர்க்கக் கட்டமைப்பே.

எல்லாப் பிணிகளுக்குமே ஏற்ற மாமருந்தாக தர்மகர்த்தா கொள்கையைக் காந்தியம்முன் வைக்கிறது. இதன் வாயிலாக, வறியவர்களின் பொருட்டு பணக்கார வர்க்கங்கள் தங்கள் உடைமைகளைத் தர்மகர்த்தா ஸ்தாபனங்களில் வைத்திருப்பார்கள் எனக் கூறுகிறது இந்தத் தர்மகர்த்தா கொள்கையே காந்தியத்தின் எள்ளிநகையாடத் தக்க பகுதியாய் இருக்கிறது. காந்தியாரைத் தவிர வேறு எவரேனும் இக்கருத்தை முன்மொழிந்திருந்தால், அம்மனிதன் வாழ்க்கையின் கடுமையான உண்மை நிலைகளை அறியாதவன் எனவும்........... ஊழிய வர்க்கங்களை ஏய்ப்பவனாகவும் கொண்டு அவனை ஒரு அற்ப மூடனென அனைவரும் பரிகசித்திருப்பார்கள்.

ஆசிரியர் : கு. நாராயணபாரதி, வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம்.எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ் 137. டாக்டர் நடேசன் ரோடு, சென்னை — -600 005. முகவரி 1494, அண்ணாநகர். சென்னை—600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# டி வி ராமரும் சீதையும்

டி வி ராமாயணம் ஒவ்வொரு ஞாயிறும் தொடங்கும் போது ஆரத்தி எடுத்து, பக்தி பரவசப் படுபவர்கள் இருப்பதாக கேள்விப்படுகிறோம்.

இதில் ராமனாகவும், சீதையாகவும் வேடமணிந்தவர்களைக் கடவுள் அவதாரங்களாகக் கும்பிடவும், காலில் விழவும், மெய்சிலிர்த்துப் போகவும் இங்கே மக்கட் கூட்டமே உண்டு.

இதைப் பயன்படுத்தித்தான் அலகாபாத் தேர்தலில் ராம நடிகர் அருண்கோவிலை டிவி ராமர் வேடத்திலேயே அழைத்து வந்து, பிரச்சாரம் செய்யச்சொல்லி அரசியல் ஆதாயம் தேட முயன்றது ஆளும் காங்கிரஸ்.

படிக்காத பாமர மக்கள் சிலர் நிஜ ராமனே காங்கிரசுக்கு ஓட்டுப் போடச் சொல்வதாக நம்பி, ஓட்டுப் போட்டார்கள் என்பது உண்மையே.

மக்களைத் தொடர்ந்து கல்வியறிவற்றவர்களாகவும், பாமரர்களாகவும் வைத்திருப்பதில் அரசுக்கு எத்தனை லாபம் என்பதை மெய்ப்பிக்க இதுவும் ஒரு நிகழ்ச்சி.

அது சரி, பாமர மக்கள்தான் இப்படி என்றால், படித்த அரசு அதிகாரிகளுமா மூடர்களாக இருப்பார்கள் ?

அண்மையில் டிவி சீதையான நடிகை தீபிகா, படப்பிடிப்பிற்காக பம்பாய் வீதியொன்றில் காரில் விரைந்து கொண்டிருந்த போது, போக்குவரத்துக் குற்றம் புரிந்ததாக நிறுத்தப்பட்டார். அங்கேயே அபராதம் விதிக்கப்பட்டார்.

அபராத சீட்டைப் பெற்று, தனது லைசென்சைக் காட்டிப் பணத்தை வழங்க தீபிகா முன் வந்தபோது காவல்துறை அதிகாரி அவர் லைசென்ஸ் படத்தைப் பார்த்துவிட்டார். அவரது கடுகடுப்பான முகம் மென்மையாகி, அசடு வழிந்தது! மனசாட்சியும், தெய்வ பயமும் அவரை ஆட்கொண்டன.

அட ! சீதாப்பிராட்டிக்கு அபராதம் விதிப்பதா ? உலகம் அவரை மன்னிக்குமா ?

உடனே ஒரு தாளை நீட்டி சீதையிடம் ஆட்டோகிராப் கையெழுத்துக் கேட்டார். பெரிய மனதுடன், கோடு தாண்டிய சீதையும் போட்டுக் கொடுத்தார். காவல்துறை அதிகாரி தான் பிறந்த பயனை அடைந்ததாக அகமகிழ்ந்தார்.

திரைப்படத் தேவதை உடனே தனது கையெழுத்தை மட்டுமே அவரிடம் விட்டுவிட்டு, தனது நவீன தேரில் கனவுத் தொழிற்சாலையை நோக்கிப் பயணமானார்.

— அஞ்ஞானி

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பள்ளிகள் என்னும் தொழிற்சாலைகள்

**முதலாளி :** என்னப்பா நம்ம தொழிற்சாலையிலே இந்த வருஷம் லாபம் ரொம்ப குறைஞ்சிடுச்சு போலிருக்கே.

**மேலாளர்:** ஆனா நம்ம பள்ளிக்கூடத்திலே இந்த வருஷம் ஏகப்பட்ட லாபங்க அதனால சரிக்கட்டிடலாம்.

இது சிரிப்புத் துணுக்கு அல்ல. காதில் விழுந்த உண்மை, பணம் ஈட்டுவதற்கு மாற்று வழியாகக் கருதி பல வியாபாரிகள், தொழிலதிபர்கள், படிப்பு வாசனையே இல்லாத பணக்காரர்கள் நாடெங்கும் பள்ளிக்கூடங்களைத் தொடங்கி அதனையே கடை மாதிரி அல்லது தொழிற்சாலை மாதிரி நடத்தி கல்வியை இருட்டுக்கு அனுப்பி வருகிறார்கள்.

சம்மந்தப்பட்டவர்களைக் கவனித்து அனுமதி பெற்றால் இந்த நாட்டில் கை நாட்டுப் போடத் தெரியாதவனும் கல்லூரி ஆரம்பித்துவிட முடியும். எதிர்கால சந்ததிகளை உருவாக்கும் மிக முக்கியமான பணி இன்று வியாபாரிகள் கையில் சிக்கிக் கொண்டுள்ளது மிகமிக ஆபத்தானதாகும்.

தங்கள் சோப்பையே அதிகம்பேர் வாங்க வேண்டும் என்பதற்காக ஒரு வணிக நிறுவனம் கையாளும் அதே பாணி உத்திகளை, வணிகர்களின் கல்வி நிறுவனங்களும் பின்பற்றுகின்றன. சுவரொட்டிகளிலும் நாளிதழ்களிலும் பள்ளி விளம்பரங்கள்.

பள்ளிகளிடையே உள்ள வணிகப் போட்டியில் வெற்றிபெற மேல் வகுப்பில் மிக அதிக மாணவர்களை, மிக அதிக மதிப்பெண்களுடன் தேற வைப்பதே இவர்களின் குறிக்கோள். எனவே தேர்வுக்கு 4 மாதங்கள் முன்பிருந்தே மாணவர்களுக்கு இடைவிடாத் தேர்வுகள்; மூளைச் சித்திரவதைகள்; அறிவு வன்முறைகள்.

மாணவர்களுடன் தொண்டை கிழிய கத்தவும், கையொடிய தேர்வுத்தாள் திருத்தவும், வேலையற்ற பட்டதாரிகள், கடும் சட்டதிட்டங்களுடன் வேலைக்கமர்த்தப்பட்டு, உழைப்புச் சுரண்டல் செய்யப்படுகின்றனர்,

மிகக் குறைந்த வசதிகள், மிக அதிகமான மாணவர்கள் மிகக் குறைவான ஆசிரியர் சம்பளம், மிக அதிகமாக பள்ளிக் கட்டணம் என்பது இவர்களின் பணம் ஈட்டும் வணிக சூத்திரம்.

நாடெங்கும் கல்வியைத் தேசிய உடைமை ஆக்க அரசுக்கு ஒரு துளி மை போதும்! ஆனால் இது யாருடைய அரசு? — ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சோதிடர்களை நம்புகிறார் ரீகன்



அறிவியல் கொடிகட்டிப் பறக்கும் நாடு அமெரிக்கா. ஆனால் இங்கு அஞ்ஞானங்களுக்கும் பஞ்சமில்லை இந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் ரீகன், சோதிடர்களையே நம்பி செயல்படுவதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வந்துள்ளது.

அண்மையில் உலகைக் குலுக்கிய அமெரிக்க சோவியத் ஒப்பந்தம் கையெழுத்தான நாள், நேரத்தை சோதிடர்களைக் கேட்டே ரீகன் முடிவு செய்ததாகத் தெரிகிறது.

ரீகன் மனைவி, அமெரிக்காவின் முதல் பெண்மணி நான்சி சோதிடத்தில் கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்துள்ளார். நான்சியின் அறிவுரைப்படியே ரீகன் அரசியல் முடிவுகள் அனைத்தையும் எடுக்கிறார். இந்த உண்மைகளை வெள்ளை மாளிகைச் சார்ந்த மார்லின் பில்ட்சுவாட்டர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

லாஸ் ஏஞ்சல்சைச் சார்ந்த பெண் சோதிடர் ஜாய்ஸ் ஜில்சன், ரீகன் தன் முக்கிய நிகழ்வுகளை நடத்தும் நேரத்தைக் குறித்துத் தரும்படி கேட்பதாக அறிவித்துள்ளார். ரீகன் பத்திரிக்கையாளர் கூட்டங்களை முழுநிலவு நாட்களில் தான் கூட்டுகிறார் என்ற உண்மையையும் இந்த அம்மையார் சுட்டிக் காட்டுகிறார்.

1981 இல் ரீகனைக் கொல்ல ஏற்பட்ட முயற்சிக்குப் பிறகு நான்சிக்குச் சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ரீகனின் பாதுகாப்பு பற்றியும். அவருக்கு ஆபத்தில்லாத நேரம் பற்றியும். நான்சி சோதிடர்களிடம் உறுதிப்படுத்தத் தவறுவதில்லை.

ரீகன் தனது காலண்டர் தேதிகளுக்கு வெவ்வேறு வண்ணம் கொடுத்துள்ளாராம். நல்ல நாட்களுக்கு பச்சை; கெட்ட நாட்களுக்குச் சிகப்பு;சுமாரான நாட்களுக்கு மஞ்சள்.

வெள்ளை மாளிகையில் தலைமை அதிகாரியாக இருந்து சென்ற ஆண்டு வேலை நீக்கம் செய்யப்பட்ட ரிகன் என்பவர் "ரிகன் நினைவுகள்" என்ற நூலில் அமெரிக்க அதிபர் ரீகனின் சோதிட நம்பிக்கைகளை உலகுக்கு வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார். இதில் உள்ளவற்றை நிச்சயப்படுத்துவதுபோல 1980இல் 'வாஷிங்டன் போஸ்டுக்கு' ரீகன் தந்த நேர்காணலில், சோதிடர் காரல்ரைட்டர் எழுதும் 'ராசி பலன்' பகுதியைத் தவறாமல் தான் படிப்பதாகக் கூறியுள்ளது மட்டுமின்றி "நியூயார்க் நகரில் புகழ் பெற்றவர்களில் 80% பேர்கள் கும்பராசிக்காரர்களே" என்று தனது கும்ப ராசி பற்றி சோதிடத்தனமாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறார். ரீகனின் இந்த நட்சத்திரப்போர் ஆபத்தானது!

— அஞ்ஞானி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது தயிர் மருத்துவம்

❀ பாலை விடத் தயிரும் அதனை விட மோரும் உடலுக்கு நன்மை பயப்பவை. தயிரோ, மோரோ இன்றி நம் உணவைப் பூர்த்தி செய்வது நல்லதல்ல. தயிர் சாதத்திற்கு இன்னொரு பெயர் : அன்னபூரணி

❀ தயிரின் மருத்துவக் குணம் : பசியைத் தூண்டும்; உடலுக்குக் குளிர்ச்சி தரும்; குமட்டல் வாந்தி நீக்கும்; அஜீரணம் போக்கும். பேதியைக் கட்டுப்படுத்தும்; மஞ்சட் காமாலையைக் குணப்படுத்தும்.

❀ தயிரில் சுண்ணாம்புச் சத்தும் வைட்டமின் " சி " யும் உள்ளன. எனவே இச்சத்துப் பற்றாக்குறையால் ஏற்படும் அனைத்துக் கோளாறுகளுக்கும் தயிர் நல்லது.

❀ சருமம் பளபளக்கவும், சூரிய வெப்பத்தினால் பாதிக்கப்படாமல் இருக்கவும் கண்ட கிரீம்களைப் பயன்படுத்தாதீர்கள். தயிர் அல்லது மோரை உடலில் பூசிக் குளித்துப் பாருங்கள். நீங்கள் வியக்குமளவுக்கு முகமும் உடலும் மினுக்கும்

❀ தலைமுடி, மிருதுவாக நீளமாக ஆரோக்கியமாக தயிரை விடச் சிறந்தது எது? தயிர் மயிர்க்கால்களில் படும்படி நன்றாக மண்டையில் தேய்த்துக் குளியுங்கள் சுமார் 20 நிமிடங்கள் தயிரைத் தலையில் தேய்த்து ஊறிய பின்னர் குளித்தால் பொடுகுகள் ஒழியும். தூக்கமின்மைக்கும் தலைச் சூட்டிற்கும் கூட தயிர்க்குளியல் நல்லது.

❀ வறண்ட முகமா? கோடுகளா? பள்ளம் மேடா? கவலை வேண்டா. நாள்தோறும் தயிரை முகத்தில் பூசி 10 நிமிடம் கழித்து முகம் கழுவுங்கள், விரைவில் பயன் காண்பீர்கள்.

❀ முகப்பருக்களை ஒழிக்க வேண்டுமா? மேற்கண்ட முறையில் குணமாகவில்லையெனில் தயிரில் சிறிது கடலை மாவு கலந்து அரைமணி ஊறிய பிறகு முகத்தைக் கழுவுங்கள். தினம் செய்து வாருங்கள். பருக்கள் மறையும்.

❀ கால்கள் சோர்ந்து விட்டனவா? தயிருடன்வினிகர் கலந்து கால்மீது தடவுங்கள். புத்துணர்ச்சி கிடைக்கும். கால்கள் வலுப்பெறவும், புத்துணர்வு பெறவும் தொடர்ந்து பாதம், கணுக்கால் குதிகால் ஆகிய பகுதிகளில் தயிரை நன்கு தேய்த்துக் குளிக்கலாம்.

❀ தயிருடன் கறுப்பு மிளகு கலந்து உண்டால் பாம்புக் கடி விஷம் முறியும்.

— சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

அறிவியல் விந்தை ;

# கம்ப்யூட்டர் எழுதிய கவிதைகள்

தேவையான வார்த்தை விவரங்களையும், எப்படி வார்த்தைகளை அலச வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலையும் கொடுத்து, கணக்குப் போடும் கம்ப்யூட்டரைக் கவிதை எழுதவும் வைக்கிறார்கள் மொழியின் இலக்கணக் கோட்பாடுகள் இதன் ஞாபகத்தில் இருத்தப்படுகின்றன. தன்னுள் புகுத்தப்பட்ட வார்த்தைத் தொகுப்பிலிருந்து இலக்கண விதிகளின்படி, மனிதனைப் போல உணர்ச்சிகளின் தூண்டுதலற்று அது சொற்றொடர்களை அமைக்கிறது. சில சமயம் இலக்கணச் சுத்தம் இருந்தும் அர்த்தம் இருக்காது. ஆனால் 'சொல் தேர்வை' கம்யூட்டர் தான் நிர்ணயிக்கிறது. இந்தத் தேர்வுதான் கம்யூட்டர் கவிதையின் சிறப்பு. கீழ்க்கண்ட கம்யூட்டர் கவிதைகள் ராக்டர் நிகழ்ச்சி நிரலில் 64 கிலோ பைட் ஞாபக செல்கள் கொண்ட Z80 மைக்ரோ ப்ராஸஸர் கம்ப்யூட்டரால் எழுதப்பட்டவை.

❁ காலத்திலிருந்தும், தண்ணீரிலிருந்தும்
அந்த முகம் எழுகிறது: அழிகிறது
எனது கனவுகளின் இனிய சலனத்தை
இழந்து விட்டேன்.
ஓய்வையும் உறக்கத்தையும் நாடுகிறேன்.

❁ பாடும் மனிதன் அவனது நண்பர்களை
சந்தோஷப்படுத்துபவன். ஆனால் ஓதுபவன்
அவன் சக மனிதர்களை சந்தோஷப்படுத்துபவன்
அல்ல

❁ முகத்தை வெட்டுங்கள் முகத்தோற்றத்தை
வெட்டுங்கள்
வானம் பூமியோடு கலக்குமாறு
தோற்றங்களை மீண்டும் உருவாக்குங்கள்
அப்போது சின்ன மனிதர்கள் வீழ்வார்கள்

❁ இரும்பிற்கும் மேலாக, கரிக்கும் மேலாக
தங்கத்திற்கும் மேலாக எனக்கு மின்சாரம் தேவை
ஆட்டிறைச்சிக்கும் மேலாக, பன்றி இறைச்சிக்கும் மேலாக
கீரைக்கும் மேலாக, வெள்ளரிக்கும் மேலாக அது
எனக்குத் தேவை. எனது கனவுகளுக்காக
அது தேவை

— இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அணுமின் நிலையம் ஒழிக !

உலகெங்கும் அணுமின் நிலையங்கள் மூடப்படுகின்றன; இந்தியாவில் அரசின் மாபெரும் சாதனையாக புதிய அணுமின் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. ரஷ்யாவின் செர்னோபில்லிலும், அமெரிக்காவின் ஒன்டோரியாவிலும் ஏற்பட்ட அணுமின் நிலைய கசிவு உலகெங்கும் அச்சத்தை விளைவித்துள்ளது. ஆனால் பெருமையுடன் நம் அரசு கர்னாடகத்தில் கைகா அணுமின் நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

மேற்கு மலைத் தொடரில் பருவமழை பொழியச் செய்யும் அடர்ந்த காடுகளும் விவசாய நிலங்களும் இத்திட்டத்திற்காக அழிக்கப்பட்டுள்ளன. வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்று கூவும் அரசின் செயல்தான் இதுவும்.

கைகா திட்டத்தின் மூளையாகக் கருதப்படுவோர் விஞ்ஞானிகளான ராஜா ராமண்ணா, எம். ஆர். சீனிவாசன், பி. கே. அய்யங்கார் ஆகிய மூவர். அறிவுத் திமிர் பிடித்த இவர்கள் விஞ்ஞான சாதனை என்ற பெயரில் அரசையும் அதன் மூலம் மக்களையும் தங்கள் விஞ்ஞானப் பரிசோதனைக்காக உருக்கி, ரூ. 4000 கோடி வசூலிக்கவிருக்கிறார்கள். முழுசெலவு ரூ. 14,000 கோடி என்பது உத்தேச மதிப்பு. செலவு ரூ. 60 கோடி என்று கூறி தொடங்கப்பட்ட நம் கல்பாக்கம் அணுமின் நிலையம் இதுவரை விழுங்கியுள்ளது ரூ 245 கோடி என்றால் கைகா இன்னும் இராட்ஷசத்தனமாக கோடிகளை ஏப்பமிடும். மற்றொரு வேடிக்கை: அயல்நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட எந்திரங்களை இயக்கிப் புதுமுறையில் அணுசக்தி தயாரிப்பது எப்படி என்று நம் விஞ்ஞானிகள் இனிமேல் தான் கற்க வேண்டுமாம் !

இந்த அணுமின் நிலையம் 25 ஆண்டுகள் செயல்படும். ஆனால் 25 ஆண்டுகளுக்குப்பின், இது வெளியிடும் கதிரியக்கம் கொண்ட கழிவுகள் இங்குள்ள மக்களைப் பல நூற்றாண்டுகளுக்குப் பாதிக்கக்கூடும்.

"எங்களுக்கு மின்சார வசதி தேவைதான். அதற்காக எங்கள் வாழ்வையும், இயற்கை வளத்தையும் அழிப்பதா? மிகப்பெரும் பொருட் செலவில் குறைந்த மின்சாரம் தயாரிப்பதை விடுத்து, மாற்று வழிகள் பற்றி விஞ்ஞானிகள் சிந்தித்தாலென்ன" என்று இம்மக்கள் கேட்பதுடன், கடந்த 3 ஆண்டுகாளக பள்ளிக் குழந்தைகள், படிப்பறிவில்லா கிராம மக்கள், பிற விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள், அரசியலார் எல்லோரும் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்கள் 10 நாட்கள் 300 கி. மீ. பாதயாத்திரை சென்று, 20,000 கிராம மக்களைச் சந்தித்து கண்ணை விற்று சித்திரம் வாங்கும் இத்திட்டத்தின் ஆபத்துக்களை விளக்கி தம்முடன் இணைத்துப் போராடி வருகின்றனர்.

— நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# விளம்பரப் பெருக்கம்



1976 இல் வணிக நிறுவனங்கள் அனைத்தும் சேர்ந்து செய்த விளம்பரங்களின் மதிப்பு ரூ: 86 கோடி. இது 1986 இல் ரூ. 583 ஆகியுள்ளது, அதாவது 600% மிகுந்துள்ளது. ஒவ்வொரு இந்தியருக்காகவும் இவர்கள் தலைக்குச் சுமார் ரூ. 830 செலவு செய்கிறார்களாம். பிறகு இந்தச் செலவைப் பொருட்களின் தலையிலே வைத்து, விலை கூட்டி நம்மையே கட்ட வைக்கிறார்கள்.

மிகுதியாக விளம்பரங்கள் செய்யும் நிறுவனங்கள் வருமாறு :

| பெயர் | 1985-86 தொகை (ரூ. கோடியில்) |
|---|---|
| இந்துஸ்தான் லீவர் | 13 5 |
| கால்கேட் பாமலீவ் | 5·1 |
| மாக்டொவெல்ஸ் | 4.? |
| புரூக் பாண்ட் | 4 5 |
| பீகோ எலக்ட்ரானிக்ஸ் | 4 4 |
| ரிலையன்ஸ் | 4·3 |
| ஐ.டி.சி. | 4 0 |
| கிளாக்சோ | 3·4 |
| எஸ்கார்ட்ஸ் | 3.4 |
| பாம்பே டையிங் | 3·3 |
| பாட்டா இந்தியா | 2 8 |
| லிப்டன் இந்தியா | 2·8 |
| டாடா ஆயில் மில்ஸ் | 2·7 |
| குவாலியர் ரயான் | 2 5 |

விளம்பரம் செய்த விதம் (ரூ. கோடியில்)

| ஆண்டு | பத்திரிக்கை | திரைப் படம் | வானொலி | தொ. காட்சி | வெளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1976 | 60 C | 7 0 | 7·0 | 11 0 | 11·0 | 86·0 |
| 1986 | 450 0 | 12·0 | 21·0 | 100 0 | 28.0 | 611·0 |
| 1987 | 486·5 | 12·5 | 22·0 | 150 0 | 29·0 | 700·0 |

ஒரு முழுமையான சோஷலிச நாட்டில் வணிக விளம்பரம் தேவையில்லை. வியாபாரப் போட்டியில்லை. மக்களுக்கு உண்மையில் நன்மை பயக்கும் சிறந்த பொருட்கள் தாமாகவே குறைந்த விலையில் கிடைக்க வேண்டும். இந்தியா நாளுக்கு நாள் சோசலிசமயமாகிக் கொண்டிருக்கும் இலட்சணம் இது தானா?

— புஸ்வாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சில நைலான் கனவுகள் எரிகின்றன

அம்மா !
அன்புக்குரிய அப்பாவி அம்மா
நீ
பின்னி முடித்த
நைலான் கனவுகள்
இதோ எரிகின்றன
அம்மம்மா !
ஒன்றா இரண்டா ?
எத்தனை எத்தனை இழைகளை
இணைத்திணைத்துப்
பின்னினாய் ?
எனது தேசத்தின்
'ராஜகுமாரர்கள்'
எனக்குத் தெரிந்து
ஆமையோட்டுக்குள்
அவதரிக்கவில்லையே, அம்மா!
எனது தேசத்தின்
'ராஜகுமாரிகள்'
இணங்க மறுத்தால்
மந்திரவாதிகளால்
பேசும் கிளிகளாய்ப்
போகும்படி
சபிக்கப்படவில்லையே அம்மா!
கதையில்......
அன்று நீ சொன்ன மாதிரி
கால் முள்ளை
எடுத்துவிடச் சொல்லும்
கானகத்துச் சிங்கங்களை
நான் கண்டதே இல்லை
அம்மா !
கடைசி வரை
எனது புத்தகத்தின்
கிழிந்த ஏடுகளில்
ஒளித்து வைத்த
மயிலிறகுகள்
குஞ்சு பொரிக்கவில்லையே!
உனது குழந்தைகளுக்கு
நீ பாட்டியாகும் போதாவது
அம்மா !
அன்புக்குரிய அப்பாவி அம்மா
அவனுக்கு
உன் கதைகளேதும்
சொல்லாதே
காலம் தந்த
கடைசிப் பிள்ளையைக்
கட்டுச்சோறு
கட்டிக் கொடுத்து
காட்டு வழியே
தனியே அனுப்பி
ஆலமரத்தடியிலவன்
தூங்கினால்..
பார்வதி சகிதம்
பரமசிவன் தோன்றிக்
கேட்கும் வரங்கள்
கேளெனக் கேட்கும்
கதைகளேதும் ...
சொல்லாதே அம்மா
வாரியணைத்து
வாழ்த்துக்கள் சொல்லி
வாழ்க்கையைச் சொல்லு
நீ வாழ்ந்ததைச் சொல்லு
உனது கதைகளும்
எனது கனவுகளோடு
எரிந்து முடியட்டும்.

ப. கங்கை கொண்டான்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

❀ கடந்த மாத இதழில் ஜூன் என்று இருப்பதற்குப் பதிலாக மே என்று அச்சாகியுள்ளது.

—பாஸ்கர், மதுரை

*(வருந்துகிறோம் : சென்ற மாத சுட்டி இதழ்கள் சிலவற்றில் ஜூன் என்பதற்குப் பதில் தவறாக மே என்று அச்சாகியுள்ளமைக்கு வருந்துகிறோம். இது போன்ற அச்சுப் பிழைகளை இனி தவிர்க்க முயல்வோம்.)*

*— ஆசிரியர்குழு*

❀ எம். ஜி. ஆர். என். டி. ஆர். அமிதாப், சிவாஜி கணேசன், வைஜயந்திமாலா, தீபா, போன்ற நடிக கூட்டத்தின் மாபெரும் அரசியல் தகுதியை நினைக்கும்போது, ஸ்ரீதேவியின் அரசியல் தகுதி எதிலும் குறைந்து விட்டதாய் தெரியவில்லை.

— லேனாதாசன், முருங்கப்பேட்டை

❀ அறிவிக்கப்படாத அவசரநிலை கட்டுரை எதிர் கொண்டுள்ள பிரச்சனையைப் பற்றி சிந்திக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தியது. ஜனநாயகத்தை விரும்புவோர் ஜனநாயக உரிமை பாதுகாப்பு கூட்டமைப்பை ஏற்படுத்திப் போராட வேண்டியது அவசியம்.

— சோலை இசைக்குயில், ரெட்டியூர்

❀ "ஜப்பானியர்கள் மாறுகிறார்கள்" என்ற கட்டுரையைப் படித்தேன். நாம் மட்டுமா வேலை செய்வதில்லை, ஜப்பானியர்கள் கூட வேலை செய்வதில்லையாமே...? என்று நமக்கு நாமே சமாதானம் செய்துக் கொள்ளவோ சுட்டி இந்தக் கட்டுரையைப் பிரசுரித்தது? — பூ. சீனிவாசன், கல்பூண்டி

❀ சுட்டியில் மேலும் சில பக்கங்களை அதிகப்படுத்தி அறிவியல் செய்திகளை வெளியிடலாமே? (வேண்டுமானால் ரூ. 1 ஆக்கலாம்) குறைந்தது 4 பக்கங்களாவது அண்மையில் வெளியாகும் அறிவியல் செய்திகளுக்காக ஒதுக்கலாம்.

— டாக்டர் சி. இராமச்சந்திரன், கரூர்

❀ அட்டையில் 'பாவம் ஜனாதிபதி' என்பதற்குப் பதிலாக, கையாலாகாத ஜனாதிபதி என்று குறிப்பிட்டிருந்தால் இன்னும் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும். ஜேம்ஸ்விக்டர் ஜேம்ஸ்பெல்சியாசாணார்பட்டி

❀ கணவன் அல்லது மனைவி யாராவது ஒருவருக்கு மட்டுமே வேலை என்ற விதியை மட்டும் அரசு திடமாக மேற்கொள்ளுமேயானால், வேலையே கிடைக்காத எண்ணற்ற குடும்பங்கள் பயன் பெறுவதுடன், குடும்பத்தில் ஏற்படும் வீண் டாம்பீகச் செலவுகளும், மனஞ் சஞ்சலங்களும் பெருமளவுக்குக் குறைந்துவிடும் இது உறுதி.

— பி.எல். பரமசிவம், மதுரை-1.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தென்னாட்டிற்குத் தனி டி. வி.

தேசிய ஒற்றுமை பற்றித் தொண்டை கிழியக் கதறும் மத்திய அரசின் தொலைக் காட்சியே தேசிய ஒற்றுமையைச் சீரழிக்கிறது!

இரவு நேரத்தில் ஒளிபரப்பப்படும் 'தேசிய' நிகழ்ச்சிகள் யாரால், யாருக்காக நடத்தப்படுகின்றன? இந்தியாவில் பெரும்பாலோருக்குத் தெரியாத இந்தி என்ற தேசிய மொழியில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது ஒரு புறம் இருக்கட்டும். தூர்தர்ஷன் அகராதியில் தேசியம் என்றாலே வட இந்தியாதான். இந்திய இசை என்றாலே இந்துஸ்தானிதான், தேசிய நடிகர் என்றாலே இந்தி நடிகர் என்றாலே நடிகர்தான்.

இந்தியாவிற்குத் தெற்கில் உள்ள மாநிலத்தவர்களின் மொழியும், பண்பாடும், இலக்கியமும், வரலாறும், புவியியலும், தீண்டத்தகாதனவா? வட நாட்டு நடிகர்களைக் கொண்டு, வடநாட்டுச் சூழலில் வட இந்திய கதைகளை மட்டும் ஒளிபரப்புவது டிவியின் ஏகபோக உரிமையா? தென் மாநிலங்களில் தேர்ந்த நடிகர்களுக்கு எப்போது பஞ்சம் வந்தது? இங்குள்ள இலக்கியங்களை வடநாட்டார் தெரிந்து கொள்ளக்கூடாது என்ற சபதம் எடுத்துள்ளனரா? ராமாயணம் போனால் மகாபாரதம் தான் வரவேண்டுமா? சிலப்பதிகாரம் வரக்கூடாதா? மலையாளத்தில் உள்ள அற்புத நாடகங்கள் டிவியில் அரங்கேறவே கூடாதா?

சில காலம் முன்பு தென்னிந்திய மொழிகளைப் பேசுவோர் கிண்டல் செய்யப்பட்டனர். தென்னிந்திய பாத்திரங்கள் நையாண்டியாக சித்திரிக்கப்பட்டன. இந்தியா அரசின் தொலைக்காட்சி தன் சொந்த மக்களையே கேவலப்படுத்தியது. கடுமையான விமர்சனங்களுக்குப் பின் இப்போக்கு சற்றே தளர்த்தப்பட்டுள்ளது.

கேரள கர்நாடக முதல்வர்கள் தேசிய நிகழ்ச்சிகள் தங்கள் மாநிலங்களைப் புறக்கணிப்பது பற்றிக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தும் மத்திய அரசின் மனப்பான்மை மாறவில்லை. எல்லா தேசிய இனங்களுக்கும், சிறப்பாக தென்னாட்டுக்கும் சம உரிமை தரும் நிகழ்வுகளைத் தர மத்திய அரசு நிர்வாகத்திருத்தம் செய்யாவிட்டால், தென்னாட்டிற்கு என்று தனித் தொலைக்காட்சி அமைப்பு கேட்டு நாம் குரல் எழுப்ப வேண்டும்.

— எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## எமக்கு வந்தவை

சுட்டும் விழிச்சுடர் (5-00) அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்கள் மேல் பாய்ச்சப்படும் ஒளிக் கதிராக அமைந்த கவிதைகள்; மீ. உமா மகேஸ்வரி, வெளியீடு; ராதி பதிப்பகம், சாந்த நகர், திருப்பத்தூர்-635 601.

அழாதே எழு : (1.00) பிரச்சினைக்குரிய தீர்வை நோக்கிப் போராட வலியுறுத்தும் 19 கவிஞர்களின் கவிதைகள். தொகுப்பு: சோலை இசைக்குயில் 43, பே. ச. குப்பம், ரெட்டியூர் அஞ்சல், ஜோலார்பேட்டை 635 851.

வாழ்ந்தே தீருவோம் : (2-00) தத்துவக் கவிதைகள், ஜி. வில்சன். அமல்ராஜ்

மே தினம் ஏன் : (1-00) ஜி. வில்சன் அமல்ராஜ்

பெரியார் சமதர்ம வாதியா? (1-00) ஜி. வில்சன் அமல்ராஜ்

மார்க்சியம் என்றால் என்ன ? (1-00) ஜி. வில்சன் அமல்ராஜ்

CONCEPT OF NEUTRAL UTILITY (3-00) Economics of Emotions G. Wilson Amalraj

மேற்கண்ட 5 நூல்களும் கிடைக்குமிடம் : Anand House, 4-B, College Quarters, Tirupattur-635 601.


**உங்களூரில் சுட்டி கிடைப்பதில்லையா ?**

உங்கள் ஊர் சுட்டி முகவர் நின்றிருக்கலாம். எனவே கடைகளுக்கு வராமலிருக்கக்கூடும். கடைகளில் சுட்டி கிடைக்காமையால் சுட்டி நின்றுவிட்டதாக சில வாசகர்கள் அஞ்சுகிறார்கள். கடந்த 89 மாதங்களாக சுட்டி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்.
சுட்டிக்கு ரூ. 10/- பணவிடை (M.O.) செய்து சந்தாதாராவதே சுட்டி உங்களுக்குத் தவறாமல் வீட்டில் கிடைக்க நிச்சயமான வழி.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா ?**

நீங்கள் படிக்காமல் விட்ட முன் இதழ்களைப் படிக்க (இதழ் எண் 72 முதல் பெறலாம்.) இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.


FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி : மாத இதழ் : பதிவு எண் : TN/MS (N) 317

# சென்னை மாறுகிறதா ?

இன்னும் ஈராண்டுகளில் சென்னை சிங்கப்பூரைப் போல வெளித் தோற்றம் அளிக்கப் போகிறது. அடுத்த 3 ஆண்டுகளில் கடைகள் பல்பொருள் அங்காடிகள், மொத்த வணிக மண்டிகள் இவற்றை அமைப்பதற்கான கட்டடக் காடுகளுக்கு ரூ. 200 கோடி பணவெள்ளம் பாய்ச்சப்படவிருக்கிறது.

சென்னை மாநகர வளர்ச்சிக்கழகம் மட்டும் கொத்தவால் சாவடியைக் கோயம்பேட்டிற்கு மாற்ற ரூ. 50 கோடி செலவழித்து வருகிறது. மிக நவீனமாக 220 ஏக்கரில் மாபெரும் கான்கிரீட் மாளிகைகளில் 3000 காய்கறி, பழ, பூ மொத்தக் கடைகளும், 1000 துணிக் கடைகளும் வரப்போகின்றன.

இதைத் தவிர தனியார் சிலரும் ராட்ஷசக் கடைகளை எழுப்பி வருகின்றனர். சிங்கப்பூர் பிளாசா என்ற பெயரில், அசோசியேட் என்ற நிறுவனம் 800 பல்வகைக் கடைகளைக் கொண்ட நவீன மாளிகையை ரூ. 10கோடி செலவில், டவுன் பகுதியில் அடுத்த ஆண்டு தொடங்குகிறது.

அண்ணாசாலையில் உள்ள ஸ்பென்சர் நிறுவனம் 10 ஏக்கர் நிலத்தில் 3 மாடி அதி நவீன கடைத் தொகுதியை ரூ. 50 கோடி செலவில் அமைத்துக் கொண்டிருக்கிறது. இதில் 5 கண்ணாடி குமிழ் ஏற்ற இறக்கிகளும் (லிப்ட்), 30 நகர்த்திகளும் (எக்ஸ்லேட்டர்) உண்டு. வாகனங்களை 2வது மாடிக்குக் கொண்டு வந்து நிறுத்தலாம். 600 கடைகள் அமைந்துள்ள 5.5 லட்சம் ச. அடி பரப்பும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலேழுந்தவாரியாக பல ஆடம்பர வசதிகளை விரைந்து பெற்றுவரும் சென்னையில், தெருவோரத்தில் விலங்குகளைப் போல் வாழும் லட்சக்கணக்கானோரும், நாற்றம் பிடித்த சேரிகளில் வாழும் 32·1% மக்களும் எப்போது குறைந்த பட்ச மனித வசதிகளைப் பெறப் போகிறார்கள்? குடிநீர் வசதி அறியாமல் வறட்சியால் வாடும் லட்சக்கணக்கான வீடுகளுக்கு எப்போது ஒருவேளை தண்ணீர் கிடைக்கப் போகிறது? இதற்கெல்லாம் நம்பகமான திட்டம் ஒன்றும் அண்மையில் இல்லை !


# சுட்டி

தொடர்பு முகவரி : AP 638, 'H' பிளாக், அண்ணாநகர், சென்னை–600 040.

ஆண்டுச் சந்தா: ரூ. 10 ஆயுள் சந்தா: ரூ. 150


http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)

FREE E - BOOKS , www.thamizham.net.,